# SRI SARADA COLLEGE OF EDUCATION (AUTONOMOUS), SALEM – 16

## Career Advancement Scheme - Principal



Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18:46

**கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–600 006.**

**பிறப்பிப்பவர்: முனைவர். இரா. சாருமதி, எம்.எஸ்ஸி., பிஎட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,**

**மூ.மு.எண்.22870/[illegible]/2018 , நாள்: 17.12.2018.**

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை–உதவி பெறும் கல்லூரி – சேலம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி (தன்னாட்சி), வரலாற்றுத் துறை உதவிப்பேராசிரியர் முனைவர். எஸ். சாந்தி என்பார் – கல்லூரி முதல்வராக நியமனம்–மான்யத்திற்கு அனுமதித்து ஆணை வழங்குதல்–தொடர்பாக.

பார்வை: 1) அரசாணை (நிலை) எண்.111, உயர் கல்வித் (எச்1) துறை, நாள்:24.03.1999.

2) அரசாணை (நிலை) எண்.345, உயர் கல்வித் (எச்1) துறை நாள்:03.10.2005.

3) தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் கடித ந.க.எண்.01734/அ2/2018, நாள்:30.05.2018.

-----

சேலம், ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. ஜனகவல்லி என்பார் 28.02.2018 அன்று ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடத்தில் அக்கல்லூரியின் வரலாற்று துறையின் தேர்வு நிலை / உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ். சாந்தி என்பார் 01.04.2018 முற்பகல் முதல் முதல்வராக கல்லூரி நிர்வாகத்தால் நியமனம் செய்யப்பட்டு நியமன ஒப்புதல் கோரும் கருத்துரு பார்வை (3)–ல் காணும் இணை இயக்குநரின் கடிதத்துடன் வரப்பெற்றுள்ளது.

பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இவர் 15 ஆண்டுகளுக்கு மேல் விரிவுரையாளராகப் பணி புரிந்துள்ளார். பார்வை (2)–ல் காணும் அரசாணைப்படி முதல்வர் பதவிக்குரிய கல்வித் தகுதியினைப் பெற்றுள்ளார். தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் இவருடைய முதல்வர் பதவிக்கான கல்வித் தகுதிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

முனைவர் எஸ். சாந்தி என்பார் முதல்வர் பதவி உயர்வு பெறுவதற்கான கல்வி மற்றும் பிற தகுதிகளை நிறைவு செய்துள்ளதால், இவர் முதல்வராக பதவி உயர்வு பெற்ற 01.04.2018 மு.ப முதல் நியமன ஒப்புதல் வழங்கப்படுகிறது.

17/12/18

**கல்லூரிக் கல்வி இயக்குநர்**

17.12.2018

பெறுநர்:
செயலர்,
ஸ்ரீ சாரதா கல்வியியல் கல்லூரி,
சேலம் – 636016.

நகல்:
1. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், தருமபுரி மண்டலம், தருமபுரி.
2. சார்ந்த முதல்வர் (செயலர் வழியாக)

SRI SARADA COLLEGE OF EDUCATION
7443
27 DEC 2018
★ SALEM-636 016 ★

Signed By:S SANTHI
Digitally Signed
Salem
Signing Date:26.04.2023 18:46